**செ.வெ. எண்: 451** **நாள் : 19.7.2007.**

## 2007–2008ம் கல்வியாண்டில் பி.எட் பட்டப்படிப்பிற்கு மாணவ மாணவியர் சேர்க்கைக்கான அறிவிப்பு

2007–2008 ஆம் கல்வியாண்டில், இரு கல்வியியல் மேம்பாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அரசு, அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகள் மற்றும் சுயநிதி கல்வியியல் கல்லூரிகளில், அரசு இட ஒதுக்கீட்டு இடங்களுக்கான பி.எட் மாணவர் சேர்க்கை இட ஒதுக்கீடு அடிப்படையில் **ஒற்றைச் சாளர முறையில்** (Under Single Window System) நடைபெறவுள்ளது. சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் **25.7.2007 முதல் 02.08.2007** வரை காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை எல்லா வேலை நாட்களிலும் கீழ்க்கண்ட 21 கல்வியியல் கல்லூரிகளில் மட்டும் வழங்கப்படும். விண்ணப்பத்தின் விலை ரூ.300/– தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினம் சார்ந்த மாணவர்கள், அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்று கையொப்பம் (Attested) இடப்பெற்ற சாதி சான்றிதழின் நகலை அளித்து ரூ.175/– செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பத் தொகையைப் பணமாக அல்லது The Secretary, Tamil Nadu B.Ed Admissions, Chennai - 5 என்ற பெயரில் (சென்னையில் காசாக்கும் வண்ணம்) நாட்டுடைமையாக்கப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட (Scheduled) வங்கிகளில் பெறப்பட்ட கேட்பு வரைவோலையாக (Demand Draft Payable at Chennai) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் கிடைக்குமிடம் :

01. கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், சைதாப்பேட்டை, சென்னை – 600 015.
02. விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், திருவல்லிக்கேணி, சென்னை–600 005.
03. அரசு கல்வியியல் கல்லூரி, குமாரபாயைம் – 638 183.
04. அரசு கல்வியியல் கல்லூரி, ஓரத்தநாடு – 614 625.
05. அரசு கல்வியியல் கல்லூரி, புதுக்கோட்டை – 622 001.
06. அரசு கல்வியியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 641 001.
07. அரசு கல்வியியல் கல்லூரி, காந்தி நகர், வேலூர் – 632 006.
08. என்.கே.டி. தேசிய கல்வியியல் மகளிர் கல்லூரி, திருவல்லிக்கேணி, சென்னை–5.
09. ஸ்டெல்லா மாட்டிடியூனா கல்வியியல் மகளிர் கல்லூரி, காமராசர் சாலை, அசோக் நகர், சென்னை – 83.
10. செயின்ட் கிறிஸ்டோபர் கல்வியியல் கல்லூரி, வேப்பேரி, சென்னை – 600 007.
11. மெஸ்டன் கல்வியியல் கல்லூரி, ராயப்பேட்டை, சென்னை – 600 014.
12. ஸ்ரீ. ஆர்.கே.எம்.வி. கல்வியியல் கல்லூரி, ராமகிருஷ்ணா வித்யாலயா அஞ்சல், கோயமுத்தூர் – 641 020.
13. ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி, பேர்லாண்ட்ஸ், சேலம் – 636 016.
14. லட்சுமி கல்வியியல் கல்லூரி, அம்பாத்துறை (ஆர்.எஸ்) காந்திகிராமம் – 624 302.
15. செயின்ட் ஜஸ்டின் ஆசிரியர் மகளிர் கல்லூரி, 161–எ, காமராசர் சாலை, மதுரை – 625 009.
16. தியாகராசர் ப்ரிசெப்டார் கல்லூரி, மதுரை – 625 009.
17. வ.உ.சிதம்பரனார் கல்வியியல் கல்லூரி, தூத்துக்குடி–628 008.
18. அன்னம்மாள் கல்வியியல் மகளிர் கல்லூரி, திருச்செந்தூர் சாலை, தூத்துக்குடி – 628 002.

19. செயின்ட் இக்னேசியஸ் கல்வியியல் கல்லூரி, பாளையங்கோட்டை – 627 002.
20. செயின்ட் சேவியர்ஸ் கல்வியியல் கல்லூரி. பாளையங்கோட்டை – 627 002.
21. என்.வி.கே.எஸ்.டி கல்வியியல் கல்லூரி, ஆத்தூர், திருவட்டாறு – 629 191.

சேர்க்கைக்கான கல்வித் தகுதி : –

1. இளநிலைப் பட்டதாரிகள், கீழ்க்கண்ட விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண் பெற்றிருந்தால் மட்டும் விண்ணப்பிக்கவும்.

| **இனம்** | **மதிப்பெண் விழுக்காடு** |
|---|---|
| இதர வகுப்பு – O.C | 50% |
| பிற்பட்ட வகுப்பு – B.C | 45% |
| மிகவும் பிற்பட்ட வகுப்பு M.B.C | 43% |
| தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பு (SC/ST) | 40% |

உடல் ஊனமுற்றோர் மற்றும் கண்பார்வை அற்றவர் இளநிலைப்பட்டப் (UG) படிப்பில் தேர்ச்சி பெற்றிருந்தாலே விண்ணப்பிக்கலாம்.

2. இளநிலை (UG), முதுநிலை (PG) ஆகிய இருநிலைகளிலும் ஒரே பாடத்தை பயின்றிருந்தால் மட்டுமே முதுநிலை படிப்பிற்கான மதிப்பெண் வழங்கப்படும் ; மனையியல், பொருளாதாரம் மற்றும் வணிகவியல் பாடப்பிரிவுகளில் முதுநிலை (PG Degree) பட்டப்படிப்பில் தேர்ச்சிப் பெற்றிருந்தால் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

3. ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள கல்லூரிகளின் பெயரும், முகவரியும், அந்தந்த மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் விண்ணப்பங்கள் விற்கப்படும் அனைத்து கல்லூரிகளில் அறிவிப்பு செய்யப்படும். இம்மாநிலத்திலுள்ள அனைத்து கல்வியியல் கல்லூரிகளில் உள்ள பாடப் பிரிவுகளின் விவரமும், இட ஒதுக்கீடும் கலந்தாய்வின் போது, அறிவிக்கப்படும் . கலந்தாய்வு மையத்தின் பெயர், முகவரி மற்றும் நாட்கள் பின்னர் அறிவிப்பு செய்யப்படும்.

4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **02–08–2007** ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி “செயலர், தமிழ்நாடு பி.எட் சேர்க்கை, விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், காமராசர் சாலை, சென்னை – 5” என்ற முகவரிக்கு மட்டும் அனுப்பப்பட வேண்டும். காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**வெளியீடு** : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை -9.